# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண். 235/மா/2018
ஆணை நாள்: 6.6.2019

அருணன் பத்திரிக்கை
5.11.2018 நாளிட்ட செய்தி - தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது.

திரு. எஸ். தேவேந்திரன்,
சுகாதார ஆய்வாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி. - எதிர்மனுதாரர்

05.11.2018 நாளிட்ட அருணன் வார இதழில் கோயம்புத்தூர் மாநகராட்சி 67, 68 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியில் சுகாதார ஆய்வாளராக பணிபுரியும் திரு. தேவந்திரன், குறித்து குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுகளை இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து முறையீடாக பதிவு செய்தது. மேற்படி முறையீடு, முறையீட்டு மனு எண். 235/18 ஆக பதிவு செய்யப்பட்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரிடம் அறிக்கை பெற்று, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாநகராட்சி 67, 68 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியில் சுகாதார ஆய்வாளராக பணிபுரியும் திரு. தேவேந்திரன் மீது புகார் தெரிவித்து, 5.11.2018 நாளிட்ட அருணன் வார இதழில் 'செய்தி வெளியிடப்பிட்டுள்ள்து. அதில் இராமநாதபுரம், நஞ்சுண்டான்புரம் சாலை ஏற்கனவே குறுகிய சாலையாக உள்ளது என்றும், போக்குவரத்து நெரிசலாக காணப்படும் இந்த சாலையில் வாகனங்கள் அணிவகுத்து நிற்கும் நிலையில், அந்த பாதையினை பாதி அளவிற்கு மறைத்து பெரிய அளவிலான குப்பை தொட்டிகளை வைத்து வாகன ஒட்டிகளுக்கும்,

பாதசாரிகளுக்கும் மரணபீதியடைய செய்து கொண்டிருக்கிறார் என்றும், வணிக நிறுவனங்கள், வணிக வளாகங்கள் யாரிடமாவது பேரம் பேசி மாமுல் வாங்கி வருவதாகவும், இதனை எவரேனும் தட்டிக் கேட்டால் அவர் வீட்டு வாசல் முன்பு குப்பைகளை சேர்த்து குவியலாக்கி வைப்பது மற்றும் சாக்கடை கழிவுநீரை ஓட விடுவது போன்ற செயல்களை செய்து துன்பம் கொடுத்து வருவதாகவும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. ஏற்கனவே இதுபற்றி சுட்டி காட்டியும் மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் செய்தி வெளியிட்டுள்ளது.

அருணன் வாரஇதழ் செய்தியின் மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது.

இந்நேர்வில் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் தனது 24.12.2018 மற்றும் 20.3.19 நாளிட்ட ந.க.எண். 12263/2018 எம்.சி3 கடிதங்களில் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில் கோயம்புத்தூர் கிழக்கு மண்டலம் வார்டு எண்கள். 66, 67, 68 மற்றும் 75 ன் பணிகளை கவனித்து வந்த திரு. எஸ். தேவேந்திரன், களப்பணியாளர், சுகாதார ஆய்வாளராக பதவி உயர்வு பெற்று, மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு மாறுதல் செய்யப்பட்டுவிட்டார் என்றும், 28.2.19 நாளிட்ட கோயம்புத்தூர் கிழக்கு மண்டல உதவி ஆணையர் அவர்களின் குறிப்பில், புகாரில் குறிப்பிட்டுள்ள வார்டு எண். 66, 67 மற்றும் 75 க்குட்பட்ட இராமநாதபுரம், நஞ்சுண்டாபுரம் சாலை பகுதிகளில் சுமார் 823 குடியிருப்புகள் மற்றும் இரண்டு அடுக்குமாடி குடியிருப்புகளையும் உள்ளடக்கிய பகுதி என்றும், மேற்படி பகுதியில் போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் பயன்படும் வகையில் நல்ல முறையில் மாநகராட்சியால் சாலை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் போக்குவரத்து நெரிசல் இல்லாமலும் மற்றும் பொது மக்களுக்கு இடையூறு இல்லாமலும் வாகன போக்குவரத்து எவ்வித தடங்கலுமின்றி இயங்கி வருகிறது என்றும், மேற்குறிப்பிட்ட பகுதியில் வைக்கப்பட்டுள்ள குப்பை தொட்டிகள் வாகன போக்கு வரத்திற்கும், பொது மக்களுக்கும் எவ்வித இடையூறும் இல்லாமல் வைக்கப்பட்டுள்ளது என்றும், தற்போது மேற்படி இடத்தில் இருந்த குப்பை தொட்டிகள்அகற்றப்பட்டுள்ளது என்றும், இதன் பொருட்டு நாளது வரை விபத்துகள் ஏதும் ஏற்படவில்லை என்றும் எவ்வித புகார்களும் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றும், உயிரிழப்பு ஏதும் ஏற்பட வில்லை என்றும் நேரடி விசாரணையில் தெரிவித்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் அருணன் வார இதழில் வெளியிடப்பட்ட செய்திகள் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் நன்கு பரிசீலிக்கப்பட்டது. கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையினை ஏற்று இந்நேர்வில் மேல் நடவடிக்கையை கைவிடலாம் என முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 6 ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 7/6/2019

பெறுநர்:

1) திரு. எஸ். தேவேந்திரன்,
சுகாதார ஆய்வாளர்,
மேட்டுப்பாளையம் மாநகராட்சி.

2) ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்.

நகல்:

1. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
2. முறைமன்ற நடுவர் செயலர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
3. ஊராட்சி உதவி பிரிவு அலுவலர்.